பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

**A 9, tPjp> ifjb.**
**A 9, පාර, කයිතඩිය**
**A 9, Road, Kaithadi**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


---

My No: - NP/02/14/MSO/ATR/2020 Date: - 2022.03.29

பிரதம செயலாளர்,
கௌரவ ஆளுநரின் செயலாளர்,
செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
செயலாளர், பேரவை செயலகம்,
அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத்தலைவர்கள்,
வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை – அதிசிறப்புத்தர உத்தியோகத்தர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரல்**

மேற்படி விடயம் தொடர்பாக 1817/30ம் இலக்க 2013.07.03ம் திகதிய வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் XVIII இன் ஏற்பாடுகளைத் தழுவி கௌரவ ஆளுநர் அவர்களால் 2021.07.13ம் திகதியில் அனுமதிக்கப்பட்ட வடக்கு மாகாண இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கைக்கு அமைய இடமாற்றத்திற்கு தகைமை பெறும் வடக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை – அதிசிறப்புத்தர உத்தியோகத்தர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இடமாற்றத்தினை எதிர்பார்க்கும் அலுவலகர்களால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படும் இடமாற்ற விண்ணப்பமானது திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இடமாற்றக்கட்டளையைப் பெற்ற அனைத்து வடக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை – அதிசிறப்புத்தர உத்தியோகத்தர்களும் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமைக்காக அறிக்கையிடும் பொறுப்பைக் கொண்டுள்ளனர். எனவே, உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்க அவர்களை விடுவிக்க திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை – அதிசிறப்புத்தர உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பாக தங்கள் அமைச்சின் / திணைக்களத்தின் மற்றும் அவற்றின் கீழ்வரும் அலுவலகங்களிலும் கடமையாற்றும் சகல வடக்கு மாகாண முகாமைத்துவ சேவை – அதிசிறப்புத்தர உத்தியோகத்தர்களுக்கும் அறியத்தருவதுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அட்டவணைப்படுத்தி விண்ணப்பங்களுடன் பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம் அலுவலகத்திற்கு **2022.04.18**ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

*பொ.குகநாதன்*
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்
வடக்கு மாகாணம்

*ஒப்பம்: எஸ்.எம்.சமன் பந்துலசேன*
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

---